ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2139 - 2019 අගෝස්තු මස 30 වැනි සිකුරාදා - 2019.08.30

*2139 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *2208* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *2211* |


**கவனிக்க**.- நிதி சட்டமூலம் 2019, ஒகத்து மாதம் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2205-B 81555-5,403 (2019/08)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலூவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லூத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலூவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழராத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான, பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பதாரர், 40 வயதிற்கு குறையாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் அதிகபட்ச வயது 65 ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பதாரர் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்குக் குறையாதவராக இருத்தல் வேண்டும். தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

5. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

6. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

7. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2019, செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்குக் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2019, ஓகத்து 05.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | உக்குவெல | மாத்தளை தெற்கு பிரிவின் உக்குவெல பிரதேசத்தின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தளை. |

08-1009

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை திருத்தஞ் செய்தல் - காலி மாவட்டம்

2126 ஆம் இலக்க மற்றும் 2019.05.31 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 5-820 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2019.09.30 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | நியாகம | பிட்டிகல் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் பெந்தர வலல்லாவிட்ட கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி. |

08-1098

---

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை திருத்தஞ் செய்தல் - மாத்தறை மாவட்டம்

2130 ஆம் இலக்க மற்றும் 2019.06.28 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 6-777 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2019.09.23 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிப்பிட்டிய | வெலிகம கோறளைப் பிரிவின் வட்டகெதரமுல்ல பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | மாத்தறை | வெல்லபடப்பற்று மற்றும் நாற்புறமும் சூழலும் கடை வீதிப் பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |

08-1099

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியினை திருத்தஞ் செய்தல் - மாத்தறை மாவட்டம்

2130 ஆம் இலக்கம் மற்றும் 2019.06.28 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 5-776 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2019.09.23 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தறை | வெலிபிட்டிய | உடுகாவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வெலிகம கோறளைப் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | அகுரெஸ்ஸ | வெலிகம கோறளை (அக்குரெஸ்ஸ) பிரிவின் மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |
| மாத்தறை | ஹக்மன | கெபிலியபொல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கந்துபடபற்று பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மாத்தறை. |

08-1100

---

திருத்தம்

## பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை திருத்தஞ் செய்தல் - காலி மாவட்டம்

2126 ஆம் இலக்க மற்றும் 2019.05.31 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் என்னால் பிரசுரிக்கப்பட்ட 5-821 ஆம் இலக்க அறிவித்தலில் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிக்காக விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியினை 2019.09.30 ஆந் திகதி வரை நீடிக்கின்றேன்.

02. அவ்விண்ணப்பம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட ஏனைய விடயங்கள் அனைத்தும் அவ்விதத்திலேயே அதிகாரம் செலுத்தும் என தயவுடன் கருத்திற் கொள்ளவும்.

என். சீ. விதானகே,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவின் கின்தொட்ட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |
| காலி | காலி நாற்புறமும் சூழலும் | காலி மாவட்டப் பிரிவின் குருந்துவத்த/ கின்தொட்ட பிரதேச முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், காலி |

08-1101

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

துணை மருத்துவ சேவையின் குடும்ப நல உத்தியோகத்தர்கள் பயிற்சிநெறிகளுக்குப் பயிலுநர்களைத் தெரிவு செய்தல் – 2019

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் துணை மருத்துவசேவையின் பின்வரும் கற்கைநெறிக்காக பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தகைமை கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

| *சேவை* | *பயிற்சி நெறியின் பெயர்* | *பயிற்சிக் காலம்* | *பயிற்சியை தொடர வேண்டிய மொழி* | *பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை* |
|---|---|---|---|---|
| துணை மருத்துவ சேவை | குடும்பநல உத்தியோகத்தர் | வெளிக்களப் பயிற்சி 06 மாதங்கள் உள்ளடங்கலாக 1 1/2 வருடங்கள் | சிங்களம், தமிழ் | 850 |

அட்டவணை இலக்கம் 01

2. **பதவிக்கு உரித்தான கல்வி மற்றும் ஏனைய விஷேட தகைமைகள் :**

| *பயிற்சி நெறி* | *க.பொ.த. (சா.த.) தகைமைகள்* | *க.பொ.த. (உ.த.) தகைமைகள்* | *பயிற்சிக்கு உரித்தான ஏனைய தனித்துவமான தகைமைகள்* |
|---|---|---|---|
| குடும்பநல உத்தியோகத்தர் | சிங்கள மொழி/தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் திறமைச் சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கில மொழி உட்பட ஆறு (06) பாடங்களில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | 2015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த. (உ. தர) பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவின் கீழ் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந் திருத்தல். | 1. பெண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.<br>2. உயரம் 04 அடி, 10 அங் குலம் அல்லது அதற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.<br>3. சகல விண்ணப்பதாரர்களும் திருமணமாகாதவர்களாக இருத்தல் வேண்டும். கோட்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டு தற்காலிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படும் மாணவர்களும் முறையான பயிற்சிக்காக நியமிக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும் வரை திருமணம் செய்து கொள்ள முடியாது. |

*3.* **கற்கை நெறிக்குத் தனித்துவமான விடயங்கள்** :

*3.1.* விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உரிய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள, 2015, 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் உயிரியல், பௌதீகவியல், விவசாய விஞ்ஞானம் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களுள் ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*3.2.* துணை மருத்துவசேவையின் குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திட்டத்திற்கு அமைவாகவும் மற்றும் அதில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படுகின்ற திருத்தங்களுக்கு அமைவானது மான தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மத்தியிலிருந்து, அவ்விண்ணப்பதாரிகளின் க. பொ. த. (உ.த.) Z பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பயிற்சிநெறிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

*3.3.* நாடளாவிய ரீதியில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள மொத்த எண்ணிக்கையானது ஒவ்வொரு மாவட்டத்தினதும் சனத்தொகையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்படும். அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

*3.4.* அதன் பின்னர் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து ஆட்சேர்ப்பு செய்யவேண்டியவர்களது எண்ணிக்கையானது அம் மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடத்திலும் விண்ணப்பித்த ஆகக் குறைந்த கல்வித் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையின் விகிதாசாரத்திற்கு ஏற்ப பிரிக்கப்பட்டு அந்தந்த மாவட்டத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் ஆட்சேர்ப்பு செய்ய வேண்டிய தொகை தீர்மானிக்கப்படும்.

*3.3.* **பொதுவான விடயங்கள்** :

*3.3.1.* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

*3.3.2.* சகல விண்ணப்பதாரிகளும் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக்கூடிய உடற் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்;

*3.3.3.* பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கு போதியளவு உடல் ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

*3.3.4.* விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்;

*3.3.5.* சிறந்த உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

*3.3.6.* பயிற்சியின் பின்னர் மத்திய அரச சேவையில் அல்லது மாகாண பொதுச் சேவையில் நிரந்தர நியமனம் கிடைத்தால் நீங்கள் குறைந்தபட்சம் பத்து (10) வருடங்கள் சேவையாற்றுவதற்கு விருப்பப்படல் வேண்டும்;

*3.3.7.* நீங்கள் விண்ணப்ப முடிவுத் திகதியான 2019.09.27 ஆந் திகதிக்கு முன்னரான 03 வருடங்களுக்கு மாவட்டத்தில் நிரந்தர வதிவாளராகத் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். உங்களது வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒன்றைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(i) 2019.09.27 இற்கு முன்னரான 03 வருடங்களுக்கு நீங்கள் மாவட்டத்தில் நிரந்தர வதிவாளராகத் தொடர்ச்சியாக வசித்திருத்தல் வேண்டும். கிராம அலுவலரால் வழங்கப்படும் பிரதேச செயலாளரால் மேலொப்பம் இடப்பட்ட வதிவிடச் சான்றிதழ்;

**குறிப்பு**.- யாரேனுமோர் விண்ணப்பதாரியின் தகப்பன் அல்லது தாய் அரசாங்க சேவையில், மாகாண பொதுச் சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் இடமாற்றம் பெறக்கூடிய சேவையிலுள்ள காரணத்தால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களினால் விண்ணப்பதாரியொருவருக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னரான 03 வருட தொடர்ச்சியான வதிவை உறுதிப்படுத்த முடியாதுபோகும் சந்தர்ப்பங்களில் அதற்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் அது தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும்.

*3.3.8.* ஒரு மாவட்டத்தில் மேற்குறிப்பிட்டவாறு ஒதுக்கப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கையை அம்மாவட்டத்தில் தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகளைக் கொண்டு நிரப்ப முடியாத சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கையானது நாட்டின் சகல மாகாணங்களுக்கும் அந்த மாகாணங்களின் சனத்தொகைக்கு ஏற்ப மீண்டும் பகிர்ந்தளிக்கப்படும்.

**4. ஏனைய விடயங்கள்.-**

4.1. இப்பாடநெறி முழுநேரப் பாடநெறியாகும். எனவே ஐந்து வார நாட்கள் மற்றும் சனிக்கிழமை முற்பகலில், பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் அல்லது அரச நிறுவனம் ஒன்றில் முழுநேர கற்கை நெறி ஒன்றினைத் தற்போது தொடரும் மாணவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியாது. யாரொருவர் இதற்காக விண்ணப்பித்து பின்னர் ஏதாவது சந்தர்ப்பத்தில் அது தெரியவருமிடத்து அவர் கற்கை நெறியிலிருந்து/பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் அதுவரை அரசினால் அவருக்காக செலவிட்ட சகல கொடுப்பனவுகளும் அவரிடமிருந்து அறவிடப்படும். பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேரக் கற்கை நெறியைத் தொடரும் ஒருவர் இதற்காக விண்ணப்பிக்க விரும்பினால் கீழே விபரிக்கப்பட்ட முறைகளைப் பின்பற்றப்படல் வேண்டும். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேர பயிற்சி நெறியில் ஏற்கனவே பதிவு செய்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4.2. நீங்கள் ஏதாவது பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் முழு நேர கற்கை நெறிக்காக பதிவு செய்திருப்பின் அல்லது பதிவுசெய்ய இருப்பின் இப்பயிற்சிநெறியில் இணைய முன்னர் அப்பதிவை இரத்துச் செய்து கொள்ள வேண்டும். நீங்கள் பல்கலைக்கழகத்தில் பதிவுமேற்கொண்ட பின்னர் விரிவுரைகளுக்குச் செல்லாது இருப்பினும் நீங்கள் பல்கலைக்கழக மாணவராகவே கருதப்படுவீர்கள் என்பதால் அவ்வாறான விண்ணப்பதாரர்கள் தமது பெயரைப் பதிவில் இருந்து நீக்கிக்கொள்ள வேண்டும். தேவையான சந்தர்ப்பத்தில் அதை உறுதி செய்வதற்குப் போதுமான ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

4.3. நீங்கள் யாதேனுமோர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருப்பின் அந்தப் பட்டம் செல்லுபடியாகும் திகதி (Effective Date) விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளும் முடிவுத் திகதிக்கு முந்திய திகதியாக இருக்க வேண்டும்.

4.4. 2019.09.27 ஆந் திகதி அன்று பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் கற்கை நெறிகளிலோ பதிவு செய்யாதவராக இல்லாதிருப்பினும், அத்திகதிக்குப் பின்னரான காலப்பகுதிகளில் அவ்வாறான பதிவுகளை மேற்கொண்டிருந்தால் இந்தப் பயிற்சி நெறிக்கான பதிவினை நீங்கள் மேற்கொள்வதற்கு முன்னதாக அந்தப் பிற கற்கைநெறிகளுக்கான பதிவினை நீங்கள் இரத்துச் செய்துவிட வேண்டும்.

4.5. நீங்கள் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ் நடாத்தப்படும் முழு நேரப் பயிற்சி நெறியில் தற்போது பதிவு செய்துள்ள விண்ணப்பதாரியாயின், நீங்கள் இப் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அதுவரை பெற்றுக்கொண்டிருக்கும் பயிற்சிக்காக கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தில் சம்மதித்த பணத்தொகை மற்றும் அதுவரையிலும் பெற்றுக்கொண்ட சகல கொடுப்பனவுகள் ஆகியவற்றினைச் செலுத்தி உரிய பயிற்சியிலிருந்து நீங்கிக் கொண்டால் மாத்திரமே மேற்படி பயிற்சிக்காகப் பதிவுசெய்யப்படுவீர்.

4.6. மேற்படி சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருப்பினும் கட்டாயமாக நீங்கள் இந்தக் கற்கைநெறிக்கு இணைத்துக்கொள்ளப்படுவீர்கள் என இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல நிபந்தனைகளையும் பூர்த்தி செய்திருந்தாலும் நீங்கள் போதியளவு Z பெறுமானத்தைக் கொண்டிராதவிடத்து அல்லது இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திராவிடின், எவ்விதத்திலும் இப்பயிற்சிக்கு தகுதியற்றவராகவே கருதப்படுவீர்கள்.

4.7. கல்வித்தகைமைகள் மற்றும் ஏனைய சகல தகைமைகளும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித்திகதியான 2019.09.27 ஆந் திகதிக்குள் சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**5. விண்ணப்பிக்க வேண்டிய முறை.-**

5.1. மேற்படி பயிற்சி நெறிக்குச் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் (www.health.gov.lk) ஊடாக மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். அதற்காக இந்த அமைச்சின் இணையத்தளத்தில் உரிய பகுதியில் உள்ள நிகழ்நிலை (online) விண்ணப்பத்தை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள் அந்த நிகழ்நிலை (online) விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

5.2. விண்ணப்பதாரி ரூபா 300 பணத்தை இலங்கை வங்கி, தப்ரபேன், இல. 7041318 "சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், பரீட்சைக் கட்டணம் அறவிடல்" எனும் கணக்கிற்கு ஏதாவது ஒரு இலங்கை வங்கிக் கிளையின் ஊடாகச் செலுத்துதல் வேண்டும். இக்கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும் மீளளிப்புச் செய்யப்படமாட்டாது என்பதுடன் இக்கட்டணத்தினைப் பிறிதொரு பரீட்சையொன்றுக்காக மாற்றம் செய்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

5.3. தங்களினால் பதிவேற்றப்பட்ட (UPLOAD) விண்ணப்பத்தின் பிரதியினைத் தபால் ஊடாக இந்த அமைச்சிற்கு அனுப்பவேண்டிய அவசியம் இல்லை. எனினும் விண்ணப்பத்தைப் பதிவேற்றியதும் உங்களுக்குக் கிடைக்கும் 5 இலக்கங்கள் கொண்ட குறியீட்டினைப் பாதுகாப்பாக வைத்திருக்கவும். இக்குறியீடானது பின்னர் உங்களது விண்ணப்பப் படிவத்தின் அச்சுப்பிரதியினை இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்கு உதவும். வெற்றிகரமாகப் பதிவேற்றப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை அச்சிட்டு (PRINT OUT) அதில் உரிய இடத்தில் உங்களது கையொப்பத்தை இடவேண்டும். அதன் பின்னர் உங்கள் கையொப்பத்தைச் சான்றுறுதி செய்து கொள்ள வேண்டும். (6ஆவது பகுதியைப் பார்க்கவும்.)

**குறிப்பு :** விண்ணப்பத்தை பூர்த்தி செய்யும் போது உங்களுக்கு ஏதாவது சிக்கல்கள் எழுந்தால் அது தொடர்பாக வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணி தொடக்கம் பி. ப. 4.15 மணி வரையான காலப் பகுதியில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் மனித வள முகாமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவின் தொலைபேசி இலக்கம் 0112693955 ஊடாகத் தொடர்பு கொண்டு அவை தொடர்பான அறிவுறுத்தல்களை பெற முடியும்.

6. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-**

6.1. இலங்கை நிருவாக சேவையில்/ கல்விச் சேவையில்/ அரசாங்கத்தில் கணக்காளர் சேவையில்/ அரச பாடசாலையொன்றின் அதிபர் ஒருவர்/சமாதான நீதவான்/சட்டத்தரணி ஒருவர் அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 512,148.00 இற்கு குறையாத சம்பளம் பெறும் நிரந்தர ஓய்வூதியம் பெறும் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

6.2. அரசாங்கம் அல்லது அரசாங்கத்துடன் இணைந்த நிறுவனங்களில் சேவையாற்றும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அத்துடன் இது வெளிவாரியான ஆட்சேர்ப்பு என்பதைக் கவனத்திற்கொள்ளல் வேண்டும்.

6.3. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

7. **நேர்முகப்பரீட்சைக்கு நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் சமர்ப்பிக்க வேண்டிய விபரங்கள்.-**

7.1. வெற்றிகரமாக பதிவேற்றப்பட்ட நிகழ்நிலை விண்ணப்பங்களில் இருந்து ஆகக்குறைந்த கல்வித் தகைமையினைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகள் இனங்காணப்பட்டு, அவர்களது Z பெறுமானத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட முதன்மைப் பட்டியலொன்றை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவர். சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றின் மூலம் பொதுவான நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். இந்த நேர்முகப் பரீட்சைச் சபையினால் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் இந்த வர்த்தமானி அறிவித்தல் ஆகியவற்றில் குடும்பநல உத்தியோகத்தர் பதவிக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் உடற்தகைமைகள் என்பவற்றினை நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் கொண்டுள்ளனரா எனப் பரிசீலிக்கப்படும் நேர்முகப் பரீட்சையின்போது விண்ணப்பதாரிகளால் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

7.2. இணையத்தளத்தின் ஊடாகப் பதிவேற்றம் (UPLOAD) செய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப்பிரதி (உங்களது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட).

7.3. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.

7.4. க.பொ.த. (உ. தர) பரீட்சை பெறுபேறு மற்றும் Z பெறுமானத்தைக் குறிக்கும் சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

7.5. க.பொ.த. (சா.தர) பரீட்சை பெறுபேற்றுச்சான்றிதழ் (பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட).

7.6. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

7.7. வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.

7.8. மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்கான பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழ்.

7.9. விவாகமாகாதவர் என்பதை உறுதிப்படுத்துவதற்கான சமாதான நீதவான் முன்னிலையில் 50 ரூபா முத்திரை ஒன்றின் மேல் கையொப்பமிடப்பட்ட முறையான சத்தியக் கடதாசி.

7.10. பல்கலைக்கழகம் ஒன்றில் அல்லது சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் பயிற்சி நெறியொன்றில் பதிவு செய்திருக்கவில்லை அல்லது பங்கு பற்றவில்லை என்பதற்கான தங்களின் சான்றுறுதிக் கடிதம்.

**குறிப்பு**.- (அ) அத்துடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள (7.3) தொடக்கம் (7.7) வரையான ஆவணங்களின் மூலப்பிரதிகளுக்கு மேலதிகமாகத் தம்மால் சான்றுறுதி செய்யப்பட்ட அம்மூலப் பிரதிகளின் நிழற் பிரதிகளையும் நேர்முகப் பரீட்சைக்கு வரும் போது நீங்கள் எடுத்துவரவேண்டும்.

(ஆ) பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படும் இடவசதிகள் மற்றும் சேவை அவசியத்திற்கு ஏற்ப பயிற்சிக்கு இணைக்கப்படுபவர்களது எண்ணிக்கை மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை என்பன சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும்.

(இ) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் அனைவரும் பயிற்சிக்கு இணைக்கப்படுவதாக இந்த வர்த்தமானி அறிவித்தலில் எந்த இடத்திலும் அல்லது பந்தியிலும் குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

(ஈ) நேர்முகப் பரீட்சையின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் தொடர்பான விபரங்கள் *http://www.health.gov.lk* எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும், அத்துடன் இது குறித்து எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்படமாட்டாது.

8. **பயிற்சித் திட்டம்**.-

8.1. நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளுள் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் உரிய கற்கை நெறியைத் தொடர்வதற்காகப் பயிற்சிப் பாடசாலைகளுக்கு உள்வாங்கப்படுவர். பயிற்சிக் கற்கைக் காலமானது களப்பயிற்சி 06 மாதங்கள் உள்ளடங்களாக 1 1/2 வருடங்கள் ஆகும். சிங்களம்/தமிழ் மொழியிலேயே இக்கற்கை நெறியானது பின்பற்றப்படல் வேண்டும்.

8.2. பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளப்படும் பயிலுனர்கள் பயிற்சிப் பாடசாலைகளில் வலுவில் இருக்கும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படல் வேண்டும். அவ்விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக் காலம் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகளுக்கும் அவர்கள் கட்டுப்படல் வேண்டும்.

8.3. பயிற்சிக்காலத்தில் நடாத்தப்படும் பரீட்சைகளில் சித்திபெறத் தவறுபவர்கள் அல்லது வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இல்லாதவர்கள் அல்லது தமது பயிற்சிப் பாடசாலையினது பரீட்சை மற்றும் விடுமுறை நிபந்தனைகளுக்கு அமையத் தவறுபவர்கள் அல்லது பயிற்சிக்கு இணைத்துக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் குறித்து ஏதாவது பொய் அல்லது பிழையான தகவல்களை வழங்கியவர்கள் ஆகியோர் பயிற்சியின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவ்வித நட்டஈடுகளும் இன்றிப் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர்.

8.4. பயிற்சிக் காலத்தில் அரச நிருவாக சுற்றறிக்கை 03/2016 இன் உப ஆவணம் V இன் நியதிகளுக்கு அமைய மாதாந்தக் கொடுப்பனவொன்று வழங்கப்படும்.

8.5. பயிற்சிப் பாடசாலைக்கு பயிற்சிக்காக உள்வாங்கப்படும்போது பயிற்சியை சிறப்பாக நிறைவு செய்வதாகவும், அப்பயிற்சியை இடைநடுவில் கைவிடுவதில்லை எனவும், அந்த பயிற்சியை முழுமையாக நிறைவு செய்த பின்னர் உரிய பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டால் குறைந்தபட்சம் பத்து வருடங்கள் (10) சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் கீழ்/மாகாண பொதுச் சேவையின் கீழ் உரிய பதவியில் சேவையாற்றுவதாகவும்,

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடன் ஒப்பந்தத்திற்கும், பிணைக்கும் உடன்படல் வேண்டும். மேற்படி 9.3 இற்கு அமைய பயிற்சியின் போது பயிற்சியிலிருந்து விலகினால், பயிற்சியை இடைநடுவில் கைவிட்டால், பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் அல்லது நியமனம் பெற்று பத்து (10) வருட காலம் மேற்படி உரிய பதவியில் சேவையாற்றுவதற்கு தவறினால் பயிற்சிக்காலத்தின் போது அவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிடப்பட்ட செலவுகள் மற்றும் பிணைக்குரிய பணம் அவரினால் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சிற்குச் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் அப்பணத்தை அறவிடுவதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

8.6. குடும்பநல உத்தியோகத்தர் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியின் போது திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், பயிற்சிக் காலத்திலும் திருமணம் செய்யாது இருத்தல் கட்டாயமானதாகும்.

**9. சேவையில் ஈடுபடும் நியதிகள்.-**

9.1. பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு அரசு பொறுப்பேற்காது. ஆனாலும் பயிற்சியை நிறைவு செய்யும் தினத்தன்று நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமையத் தயாரிக்கப்படும் முன்னுரிமை வெற்றிடப் பட்டியலுக்கு அமைவாகச் சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்ட பின்னர் எஞ்சும் வெற்றிடங்களுக்குப் பயிற்சியைச் சிறப்பாக நிறைவு செய்து இறுதிப்பரீட்சையில் சித்தியடையும் பயிலுனர்களை அவர்கள் அப்பயிற்சி நெறியின் இறுதிப்பரீட்சையில் வெளிக்காட்டிய திறமையைக் கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும் திறமைப் பட்டியலின் அடிப்படையில் உரிய பதவியின் III ஆம் தரத்திற்கான பதவியில் நியமிப்பது தொடர்பாகக் கருத்தில் கொள்ளப்படும். அத்துடன் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய இலங்கையில் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்குக் கட்டுப்படல் வேண்டும்.

9.2. பயிற்சியின் நிறைவில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டால் அரச நிர்வாக சுற்றறிக்கை 03/2016 இன் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

9.3. விண்ணப்பத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் மற்றும் விபரங்களை மிகவும் கவனமாகவும் பிழையின்றியும் நிரப்ப வேண்டும். பயிற்சிக்காக இணைத்துக் கொள்ளும் போதும் நியமனம் பெற்ற பின்பும் மேற்படி சான்றிதழ்கள் பொய்யானவை என நிரூபணமாகினால், அது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ளப்படுவதற்காகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பரிந்துரைப்பதற்கும், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச் செய்யப்பட்டுப் பயிற்சியிலிருந்து/ பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுப்பதுடன் அது தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர் மீண்டும் அரச சேவையில் இணைய முடியாதவாறு கருப்புப் பட்டியலில் அவருடைய பெயர் சேர்க்கப்படும். பயிற்சிக் காலத்தில் இவருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகள், அரசினால் செலவிட்ட செவினங்கள் மற்றும் ஒப்பந்தப் பணம் ஆகியனவற்றினை அவரிடமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

9.4. பயிற்சிக்கு இணைத்துக்கொள்ளப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு மற்றும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குப் போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியம் கொண்டவராக இருப்பதை உறுதிப்படுத்தும் பொருட்டுப் பயிற்சிநெறி ஆரம்பித்து முதல் மாதத்திற்குள் மருத்துவப் பரிசோதனைக்குத் தம்மை உள்ளாக்க வேண்டும் என்பதுடன், மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவர் என இனம் காணப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியை தொடர்வதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

9.5. மேற்படி இணைத்துக்கொள்ளப்படும் சகல உத்தியோகத்தர்களும் அரச சேவைக்குரிய சட்டதிட்டங்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் சட்டதிட்டங்கள், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சினால் தீர்மானிக்கப்படும் கொள்கைகள், அரச நிதிப்பிரமாணம், அரசினால் விதிக்கப்படும் ஏனைய விதிமுறைகள் மற்றும் அரசினால் காலத்திற்குக்காலம் விதிக்கப்படும் திருத்தங்கள் ஆகியவற்றுக்குக் கட்டுப்படல் வேண்டும்.

9.6. பயிற்சிக்கு இணைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு பயிற்சிப் பாடசாலைகளில் தங்குமிட வசதிகள் வழங்க வேண்டுமென இவ் அமைச்சிற்கு எவ்வித கடப்பாடுகளும் இல்லை. அவ்வாறு வழங்கப்பட்டால் அதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தங்குமிட அறைக்கான வாடகை, நீர் மற்றும் மின்சாரக் கட்டணம் அறவிடப்படும்.

9.7. இப்பயிற்சிக் காலத்தினுள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல் அல்லது தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமை உங்களுக்குக் கிடையாது. பயிற்சியின் பின்னர் நீங்கள் உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டால், அனுமதி வழங்கப்பட்ட பதவிகள் தவிர்ந்த ஏனைய பதவிகளை வகிப்பவர்கள் தனியார் சேவையில் ஈடுபடுவதற்கான உரிமை இல்லை. அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரியவரின் அவ்வாறு ஈடுபடுவோருக்கு எதிராகச் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

9.8. பயிற்சிக்கு இணைத்தல் தொடர்பாகவோ அல்லது இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடங்கிய அல்லது உள்ளடங்காத ஏதேனும் விடயம் தொடர்பாக சிக்கல்கள் தோன்றினால், சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம் , தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே வலுவில் இருக்கும்.

வசந்தா பெரேரா,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு,
"சுவசிறிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு-10,
2019, ஓகத்து 05.

08-808

---

## திருத்தம்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை கணக்காளர் சேவையின் III ஆந் தரத்துக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/ திறந்த போட்டிப் பரீட்சை - 2017/2018

இலக்கம் 2135-2019.08.02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (II அ) வில் வெளியிடப்பட்டுள்ள 08-208 ஆம் இலக்க இலங்கைக் கணக்காளர் சேவையின் III தரத்துக்கு இணைத்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட/திறந்த போட்டிப் பரீட்சை 2017/2018 அறிவித்தலில் 1 ஆம் பிரிவு மற்றும் 5 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளில் பின்வருமாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

1. **பரீட்சைத் திகதி**.- பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2019, நவெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் இப்பரீட்சை நடைபெறுகின்றது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அதிகாரமுள்ளது.

அதற்கிணங்க விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்க்கும் நகரம் கொழும்பு மாத்திரம் ஆகும். ஏற்கனவே யாழ்ப்பாண நகரத்துக்கு விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகளுக்கு கொழும்பில் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

5. (அ) திறந்த அடிப்படையின் கீழ் நியமிக்கப்படும் அலுவலர்களுக்கான இந் நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதியத்துடன் கூடியதாகும். உமக்கு உரித்தான ஓய்வூதியத் திட்ட முறைமை தொடர்பாக அரசாங்கத்தினால் பிற்பட்ட காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும். மேலும் தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைக்கு/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்ட முறைக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் உம்மால் அதற்காக பணம் செலுத்துதல் வேண்டும்.

மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் கீழ் காணப்படும் அலுவலர்களுக்கு இந் நியமனம் நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதாகும். விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பங்களிப்புத் தொகையை செலுத்தல் வேண்டும்.

(ஆ) திறந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் 3 வருட நன்னடத்தைக் காலத்துக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் ஒரு வருடத்துக்கு பதில் கடமையாற்றலுக்கு உட்படுதல் வேண்டும். மேலும், இலங்கை கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான 1 ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் நியமனத் திகதி முதல் 03 வருடங்களினுள் சித்தியெய்தல் வேண்டும்.

**க.வே.**

இத்திருத்தத்தின் காரணமாக தகைமைகளைக் கருத்திற் கொள்ளப்படும் திகதி (2019.08.02) மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியிலே (2019.09.02) எதுவித வேறுபாடுகளும் இடம்பெற மாட்டாது என்பதுடன், ஏற்கனவே விண்ணப்பங்கள் அனுப்பிவைத்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
பொது நிர்வாக, அனர்த்த முகாமைத்துவ மற்றும்
கால்நடை அபிவிருத்தி அமைச்சு.

கொழும்பு,
2019, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி.

08-1112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.